சார்பு நீதிமன்றம், மதுராந்தகம்

OS. No. 2/2015

பெயர் திரு. மோகன் **நாள்.** .02.01.2025
த/பெ.

**2 முதல் 4 பிரதிவாதிகள் சாட்சி 5 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. வழக்குச் சொத்தின் புல எண் குறித்து எனக்கு தெரியாது என்றால் சரிதான். வழக்குச் சொத்து மொத்தம் இரண்டு ஏக்கர். எத்தனை இன சொத்துக்களாக கொடுக்கப்பட்டது என்று தெரியாது. இரண்டு ஊர்களில் சொத்துக்கள் உள்ளன. முதல் விசாரணை வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ராஜம்மாள் எழுதி வைத்தாக கூறப்படும் உயில் பற்றி எனக்கு தெரியாது. உயிலில் யார் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார்கள் என்று எனக்கு தெரியாது என்றால் சொல் கேள்விதான். வழக்குச் சொத்து பக்கிரிசாமியின் பூர்விக சொத்து என்றால் ராஜம்மாள் உயில் எழுதி வைத்ததன் பேரில் சொத்து உரிமை. நான் பிரதிவாதிகளுக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்குச் சொத்துக்களில் வாதிகளுக்கு பாகம் உண்டு என்று சொன்னால் சரியல்ல. பக்கிரிசாமி 5ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்த செட்டில்மெண்ட் வாசகம் பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். 5ம் பிரதிவாதி எனக்கு வேண்டப்பட்டவர் என்பதால் நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.